# விடியல்

*மாத இதழ், பொழுது – 21*
ஐப்பசி – கார்த்திகை
நவம்பர் – 2010
*vidiyalmagazhine.blogspot.com*
*vidiyalmagazhine@gmail.com*

*சிறப்பாசிரியர்*
**முனைவர் நா. கண்ணன்**
கல்லூரி முதல்வர்

*ஆசிரியர்*
**முனைவர் மா. கார்த்திகேயன்**
தமிழ்த்துறைத் தலைவர்

*இணை ஆசிரியர்*
**திரு. ப. சரவணன்**
தமிழ் விரிவுரையாளர்

*ஆசிரியர் குழு*
தமிழ் விரிவுரையாளர்கள்
அனைவரும்

*வெளியீடு:*

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA

**தமிழ்த்துறை,**
**கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
**திருச்செங்கோடு – 637 215,**
**நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.**
***www.ksrcasthamizh.blogspot.com,***
***www.ksrcas.net.***

## உள்ளடக்கம்

- *வணங்கும் வகைகள்* 02
- *எழுத்தாளர் அறிமுகம்*
  - *ஆர்.கே. நாராயணன்* 02
- **A to Z About Friend** 04
- *கட்டுரைகள்*
  - *காந்தி கணக்கு* 03
  - *முக்களம் கண்ட மாவீரர்* 05
  - **Mathematics is Divine – 1** 04
  - *பெட்ரோல் தயாரிக்கும் பாக்டீரியா* 06
  - *பிரமிட் சக்தி* 07
  - *பெண்களின் சொத்துரிமை* 12
  - *ஓசோன்* 14
- *கவிதைகள்*
  - *குழந்தை* 06, *உழைப்பு* 07
  - *இயற்கை அன்னை...* 10
  - *நட்பு, நட்பின் தத்துவம்* 15
- *குறு ஆய்வு: நமது நூலகம்* 08
- ‘குரு’ - பொருள் விளக்கம் 09
- *மருத்துவம் :*
  - *வேப்பம்பூ* 09, *இருமல்-சிலதீர்வுகள்* 10
- *கல்லூரிக்கு நன்றி* 13
- கிழமைகளின் பெயர்க்காரணம் 15
- *தொடர் கட்டுரை (பகுதி - 3)*
  - *மக்கள் தலைவர் கே.எஸ்.ஆர்.* 17
- *தொடர் செய்யுள் (பகுதி – 5)*
  - *கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழ்* 20
- *இந்த இதழின் ஓவியங்கள்* 20

# வணங்கும் வகைகள்

ஹ. சபரீஸ்
இளங்கலை கணிதம் (கணினிப் பயன்பாடு)
இரண்டாம் ஆண்டு

வணக்கங்கள் பல வகைப்படும். தலையை மட்டும் குனிந்து வணங்கினால் 'ஏக அங்க வணக்கம்'.

தலைக்கு மேல் இருகரம் கூப்பி வணங்கினால் 'திரியங்க வணக்கம்'.

இரண்டு முழங்கால்கள், இரண்டு கைகள், தலை ஆகிய அனைத்தும் நிலத்தில் பட வணங்கினால் 'பஞ்சாங்க வணக்கம்'.

இரு செவி, மார்பு தரையில் படும்படி அனைத்து அங்கங்களும் பூமியில் பட்டால் 'சாஸ்டாங்க வணக்கம்'.

இரு செவி, மார்பு தரையில் படும்படி வணங்கினால் அது 'பஞ்சாங்க வணக்கம்'.

# எழுத்தாளர் அறிமுகம்



R.K.Narayanan (1906-2002)

இராசிபுரம் கிருஷ்ணசாமி நாராயணன். (Rasipuram Krishnaswamy Narayanan) சென்னையில் வாழ்ந்தவர்.

இவர் இந்திய ஆங்கில எழுத்தாளர்களில் புலமை மிக்கவர்.

இவர் முதன்முதலில் பத்திரிகைக்குப் பங்கு அளிக்கும் வகையில் தனது படைப்பை வெளியிட்டார்.

பின்னர் அதன் மூலம் தனது பயணத்தை நாவலாசிரியராகவும், சிறுகதை எழுத்தாளராகவும் தொடங்கினார்.

இவர் ஒரு கற்பனை உலகமான மால்குடியை நிறுவினார். அதன் வழியாகப் புகழ்பெற்றார்.

***இவர் பெற்ற விருதுகள்:*** சாகித்திய அகாடமி விருது (1960), பத்ம விபூஷன் (2000)

***நாவல்கள்:*** The Guide (1958)

இந்நாவல் திரைப்படமாக மாறிப் புகழ் பெற்றது.

***கட்டுரைகள்:*** சுயசரிதம் (My-Days, 1974), பிரயாணத்தைப் பற்றிய பிரசங்கம் (My Daleless Diary)

***புராண காவியம், புராண வரலாறு:***

The Ramayana, The Mahabharata, Gods, Demons and Others.

தொகுப்பு: **சி. சரவணராஜா**
இளங்கலை ஆங்கில இலக்கியம்
இரண்டாமாண்டு

கட்டுரை:

# காந்தி கணக்கு

அன்றாட வாழ்வில் நாம் இழக்கும் சில 'சில்லறை' வகையறாக்களை, 'காந்தி கணக்குல' விட்டுவிடுவோம்.

இன்று கிண்டலாகவும், எதிர்மறை அர்த்தம் கொண்ட ஒரு வார்த்தையாகவும் 'காந்திகணக்கு' மாறிவிட்டது. ஆனால், உண்மையில் 'காந்தி கணக்கு' என்பதற்கு அர்த்தமே வேறு.

உண்மையை அனைவருக்கும் போதித்த அவருடைய பெயரை நாம் இன்று ஏமாற்றும் செயல்களுக்குப் பயன் படுத்திக் கொண்டி ருக்கிறோம்.

சுதந்திரப் போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த 1940களில் வெள்ளையர்கள் காந்தி யடிகளைக் கைது செய்து புனேயிலுள்ள ஒரு மாளிகையில் தங்க வைத்திருந்தனர்.

நீண்ட நாட்கள் சிறையில் இருக்க வேண்டியிருந்ததால் செலவுக்குப் பணம் கட்ட வேண்டும் என்பதற்காக அப்போது அவர் புனேயிலிருந்த "பேங்க் ஆஃப் இந்தியா"வில் பத்தாயிரம் ரூபாய் நிலுவைத் தொகையாகச் செலுத்தி ஒரு கணக்குத் தொடங்கினார்.

அவர் அங்குத் தங்கியிருந்த காலங்களில் அந்தக் கணக்கின் வழியாகத்தான் பணப் பரிமாற்றம் செய்து வந்தார். சில நாட்களுக்குப் பின்னர் அங்கிருந்து விடுதலையாகிச் சென்றும் கூட அந்தக் கணக்கை அவர் முடிக்காமல் இருந்தார்.

இந்தியா சுதந்திரம் பெற்றப் பின்னர் - காந்தியடிகள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னாளில் அவர் தொடங்கிய அந்த வங்கிக் கணக்கில் மீதம் இருந்த பணம் ரூ. 248 ஆகும்.

காந்தியடிகள் இறந்த பிறகும் (அந்த வங்கிக் கணக்கை முடிக்காமல்) அவருக்குச் செலுத்தும் மரியாதையாக அந்த வங்கிக் கணக்கை முடிக்காமல் அந்த மீதிப் பணத்தை அந்த வங்கி யில் வைத்திருக்கின்றார்கள்.



இன்றும் அந்தப் பணத்திற்கு உரிய வட்டியைக் 'காந்தி ஃபவுண்டேஷனுக்கு' அனுப்பி விடுகிறார்கள்.

அந்தக் கணக்கில் இருக்கும் பணம் என்றால் அது பொக்கிஷம். அது என்றைக்கும் செலவாகாமல் அப்படியே இருக்கும் என்பதுதான் பொருள். இனியாவது 'காந்தி கணக்கை' கொச் சைப்படுத்தாமல் இருப்போம்.

**கோ. மணிகண்டபிரபு**
இளங்கலை கணினி அறிவியல் துறை
மூன்றாமாண்டு 'ஆ'பிரிவு

## MATHEMATICS IS DIVINE - 1

Mathematics is tool to understand, experience, and feel the nature of god. This statement does not mean that there is a god. Also, I didn't try to explain that there is no god. Actually the statement means that you can feel status of your holiness. You can get a power of god very close to you, with in you, and every where do you want. Mathematics has a bundle of philosophical ideas that is not real but that is true. There are many concepts, terms that are not easily understandable.

What is the meaning of understandable?

Consider the three situations, some one enlighten

Something about something.
Whole thing about nothing.
Nothing about whole thing .

Which one is understandable?

The answer for the question "What you understand from the above sentence?" differs by every individual. Some one felt that what ever he understands by reading this sentence is the actual meaning of it. It is real but it is not true.

For each three situations the truth is

You could not say I understand whole thing.
You could not say I understand nothing
You could say I understand something.

I felt there is nothing to explain to understand the whole thing about something.

Before understand the term understandable. The great invention of emptiness or nothing (that is zero) is made by Indians. I feel that it happens only because of the nature of spirituality. Some one understands that the concept of whole thing about nothing and nothing about whole thing is not understandable.

Zero - 0
Infinite - $\infty$

We will discuss and understand something about the emptiness and wholeness (that is zero and infinite) in next article. If you understand that you will get a tool. If you experience the whole thing by using that tool, you will become a God.

**A. NASEER AHMED**
Lecturer, Department of Mathematics.

# A to Z
## about friend

**ர. சுகன்யா,**
இளங்கலை கணினி பயன்பாட்டியல்
முதலாண்டு, கே.எஸ்.ஆர். கலை அறிவியல்
மகளிர் கல்லூரி

### A friend is one who,

*A ccepts U,*
*B elives U,*
*C ommands U,*
*D istrubs U,*
*E ncourages U,*
*F orgives U,*
*G ives U,*
*H elps U,*
*I nvites U,*
*J ustify U,*
*K eeps close to U,*
*L oves U,*
*M otivates U,*
*N ever Hurts U,*
*O ffers U,*
*P rays for U,*
*Q uestion U,*
*R isks U,*
*S urprises U,*
*T each U,*
*U nderstands U,*
*V alues U,*
*W alk with U,*
*X -plains U,*
*Y ells U,*
*Z eals U…*

கட்டுரை:

# முக்களம் கண்ட மாவீரர்

சி. கற்பகராஜ்
இளங்கலை வணிகவியல் (கணினி பயன்பாடு) இரண்டாமாண்டு 'ஆ' பிரிவு

## முன்னுரை:

ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கு ராணுவம் மிகவும் அவசியம். தன் குடும்பத்தைப் பிரிந்து மீண்டும் தன் குடும்பத்தைப் பார்ப்போமா! இல்லையா? என்பது தெரியாமல் எல்லைப் பகுதியில் இரவு பகல் பாராது போரிடும் ராணுவ வீரனின் மன வலிமை யாருக்கு வரும். ராணுவ வீரர்களுக்கு என்று தனி மனம் உண்டு. அத்தகைய மாவீரர் மானெக்ஷா பற்றி காண்போம்.



## பொக்கிஷம்:

இந்திய ராணுவத்திற்குக் கிடைத்தப் பொக்கிஷம் இவர். 1914 ஏப்ரல் 2-ம் தேதியில் பிறந்தார். இவருடைய முழுப்பெயர் சாம்ஹோமுஸ்ஜ ஃபிராம்ஜி. 1939 ஏப்ரல் 22 சில்லுபோடாவைத் திருமணம் செய்தார். இவர்களது திருமணம் காதல் திருமணம்.

## 1 நொடிக்கு 1 படி

இரண்டாம் உலகப்போர் தீவிரமாக நடந்து கொண்டு இருந்தது. இந்தியா ஜப்பானை எதிர்த்துப் போரிட்டப் போது, போர்க்களத்தில் இரண்டு படைப் பிரிவுகளுக்குத் தலைமையேற்று ஆணை கள் பிறப்பித்துக் கொண்டிருந்தார். இயந்திர குண்டு பாய்ந்து மரணத்தின் வாசலை நெருங்கிப் பிழைத்தார். அவர் குண்டு தாங்கி நின்றதைக் கண்டு ஓர் நொடிக்கு ஒரு படி(அடி) முன்னேறினார்கள்.

சாம் மானெக்ஷா ஏற்கெனவே இருந்த உயர்ந்த ராணுவப் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஃபீல்ட் மார்ஷல் என்ற மிக மிக உயர்ந்த கௌரவ அந்தஸ்த்தைப் பெறுவதற்கு மெல்லிய நூலிழை இருந்தது. 'மேற்கு வங்காளம், அஸ்ஸாம், திரிபுரா போன்ற மாநிலங்களில் உள்நாட்டுக் கலவரம். பாகிஸ்தான் மேல் போர் எப்ப எடுப்பிங்க?' என இந்திராகாந்தி அவர்கள் கேட்டதற்கு, 'என்னோட கவசப்பிரிவு, காலாட் படையில ரெண்டுபிரிவு இரண்டும் சென்டர்ல இல்ல. ஸ்பெஷல் ரோடு, ரயில்வே லைன் வேணும். பஞ்சாப், உத்திரப் பிரதேசம் அறுவடை நடக்குது மற்றும் கிழக்குப் பாகிஸ்தான் மழை பொழிகிறது. இப்போது வேண்டாம்' என்று பதில் கூறினார் சாம். பின்னர் போர் தேதியைச் சாம் மானெக்ஷா துண்டு பேப்பரில் 1971 டிசம்பர் 4 எனக் குறிப்பிட்டார்.

இந்தியா பாகிஸ்தானை வென்றது. தன் கீழ்ப் பணி செய்த ராணுவ

பணியாளர்களுக்குச் சாம் உயிர் சக்தியாக விளங்கினார். குழம்பிப் போயிருந்த பாகிஸ்தான் ராணுவத் தினருக்குச் சாம் எச்சரிக்கை விடுத்தார். அது உலக வானொலியில் ஒளிபரப் பப்பட்டது.

கூர்கா படைவீரர்களைச் சாம் மிகவும் நேசித்தார். கூர்க்கா படை வீரர்களும் அவர் மேல் நேசத்தைப் பொழிந்தார்கள். பாகிஸ்தானுடன் போரிட்டு வங்காள தேசம் என்ற நாட்டை உருவாக்கினார். பத்ம பூஷன் விருது பெற்றார்.

வெலிங்டன் ராணுவ மருத்துவ மனையில் உடல் நலம் குன்றிய காலத்தில் டாக்டர். அப்துல்கலாம் இவரை நேரில் சென்று நலம் விசாரித்து ஆறுதல் கூறினார்.

### முடிவுரை

நல்லொழுக்கம் சார்ந்த தைரியம் இருக்க வேண்டும். செய்யும் தொழிலின் ஞானம் உள்ளவராக மானெக்ஷா விளங்கினார்.

இந்தியா சந்தித்த மூன்று போர்களின் சாட்சியாக இருந்து வெற்றிகரமாக வலம் வந்தவர் ஃபில்டுமார்ஷல் மானெக்ஷா.

## கவிதை:

# குழந்தை

*"கற்பனைக்கு எட்டாத கனவா நீ ?*
*பௌர்ணமி வியக்கும் அழகா நீ ?*
*காலை மல்லிகையின் மணமா நீ ?*
*இல்லை இல்லை நீ*
*தாயின் மடியில் தவழும் தாமரை".*

**சி.வெங்கடேஷ்**
இளங்கலை வணிகவியல்
(கணினிப் பயன்பாடு) முதலாண்டு ஆண்டு 'அ' பிரிவு

## கட்டுரை:

# பெட்ரோல் தயாரிக்கும் பாக்டீரியா

நம் உலகில் எரிபொருள் ஒரு புறம் தீர்ந்து வருகிறது. மறுபுறம் மாசு பெருகி வருகிறது. எரிபொருளின் தேவை யையும் பூர்த்திச் செய்து, மாசையும் கட்டுப்படுத்துகிறது ஒரு பாக்டீரியா.

காற்றில் கார்பன்-டை-ஆக்ஸைடு அளவு அதிகரிப்பதால் மாசு பெருகி உள்ளது. இந்தக் கார்பன்-டை-ஆக்ஸைடை உறிஞ்சி பெட்ரோலாக வெளியிடுகிறது இந்தப் பாக்டீரியா.

சையனோ பாக்டீரியம் என்ற பாக்டீரியாவில் நுண்ணுயிரியல் விஞ் ஞானிகள் செயற்கையாகச் சில மாற்றங்களை ஏற்படுத்தினர். இதற் காகப் பாக்டீரி யாவில் ரூபிஸ்கோ என்னும் நொதி சேர்க்கப்பட்டது.

அதன்பின்னர் இந்தப் பாக்டீரியாக்கள் கார்பன்-டை-ஆக்ஸைடைச் சுவாசித்து **'இசோப்புட்டால்டிகைடு'** என்ற வாயுவை வெளியிட்டன. இதை எளிமையாக மாற்றி **'இசோப்புட்டனால்'** என்ற எரிபொருள் தயாரிக்கப்படுகிறது. இது பெட்ரோலுக்குச் சிறந்தமாற்று எரி பொருளாகும்.

இதுவரை தாவரங்கள் மற்றும் பூஞ்சைகளில் இருந்து மாற்று எரிபொருள் தயாரிக்கப்பட்டு வந்தது. ஆனால், இதில் பல்வேறு மாற்றங் களைத் தாண்டி எரிபொருள் கிடைக்கும். ஆனால், இந்தப் பாக்டீரியா முறையில்

எளிமையாகக் குறைந்த செலவில் சிறந்த எரிபொருளை உற்பத்தி செய்ய முடிகிறது.

இதில் மேலும் ஒரு சிறப்பம்சமாக, இந்தப் பாக்டீரியாக்கள் சூரிய ஒளியைக் கிரகித்தும் எரிபொருளை உற்பத்தி செய்து விடும். அதாவது, சூரிய ஒளியில் இருந்து கார்பன்-டை-ஆக்ஸைடைப் பிரித்துப் பின்னர் அதை இசோப்புட்டால்டிகைடாக மாற்றும்.

எனவே, இந்தப் பாக்டீரியாக்களைக் கொண்டு இரட்டை வழியில் நிறைய பெட்ரோல் தயாரிக்க முடியும். இதனால் கூடுதலான பாக்டீரியாக்களை உற்பத்தி செய்வதில் விஞ்ஞானிகள் முனைப்புக் காட்டி வருகிறார்கள்.

மிகவும் வித்தியாசமான இந்த முறை, மாசுகளையும், கட்டுப்படுத்த உதவும் என்பதால் விரைவில் உலகம் முழு மைக்கும் பரவிவிடும் என்று எதிர் பார்க்கலாம்.

தொகுப்பு : **ஹ. சபரீஸ்**
இளங்கலை கணிதம் (கணினிப் பயன்பாடு)
இரண்டாம் ஆண்டு

**கவிதை:**

# உழைப்பு

***"பணம் என்னும் அந்த***
***மரத்தை நோக்கிப்***
***பறக்கத் துடிக்கும்***
***பறவைகள் பல!***
***அவற்றிற்கு இல்லை***
***உழைப்புச் சிறகுகள்"***

**கா. நித்யா**
இளங்கலைத் தமிழ் முதலாண்டு

**கட்டுரை:**

# பிரமிட் சக்தி

உங்கள் வீட்டில் உள்ள கிராப்ட் காகிதம், அட்டை, துணி போன்றவற்றில் பிரமிட் போன்ற அமைப்பு செய்து பிரமிடின் சக்தியைப் பெறலாம்.

*பிரமிடு தயாரிப்பது எப்படி:*

பிரமிடு தயாரிப்பில் முக்கியமான விஷயம் அதன் அளவுதான். சரியான அளவில் தயாரிக்கப்பட்டப் பிரமிடுகள் மூலம்தான் சரியான பலனைப் பெற முடியும். பிரமிடு என்பது நான்கு முக்கோண வடிவங்கள் இணைந்து உருவாகும் வடிவம் இதைக் கனத்த அட்டையில் வெட்டி துளியும் இடைவெளி விடாமல் இணைத்து ஒட்டி பிரமிட்டை உருவாக்கலாம்.

*பிரமிடின் அளவு:*

முக்கோண வடிவத்தின் அடிப் பகுதியின் அளவைவிட பக்க அளவுகள் ஐந்து சதவிகிதம் குறைவாக இருக்க வேண்டும். அதாவது அடிப்பக்க அளவு நாற்பது சென்டி மீட்டராக இருக்க வேண்டும். இருந்தால் பக்க அளவு முப்பத்தியெட்டு சென்டி மீட்டராக இருக்க வேண்டும். பிரமிடின் அளவு மூன்று அல்லது ஐந்தடியாக இருப்பது நல்லது.

*பிரமிடு தரும் நன்மைகள்:*

தியானம் மனத்தை ஒழுங்கு படுத்துவது இது பலரால் முயலாமல் போகிறது. இப்படிப்பட்டவர்கள் தினமும் அரைமணி நேரம் பிரமிடிற்குள் அமர்ந்தால் பிரமிடு சக்தி அவர்களின்

உடலில் பாய்கிறது. மனம் தியானத்தால் என்ன பலம் பெற முடியுமோ அதனைப் பெறுகிறது.

மூளைக்கு அதிக வேலை கொடுப் பவர்கள் பிரமிட் உள்ளே அமர்ந்து சிந்தித்தால் தெளிவான முடிவைப் பெற முடியும். பதினைந்து சென்டி மீட்டர் உயர பிரமிடு தொப்பியைச் செய்து தலையில் அணிந்து படித்தால் படித்தது நினைவில் நிற்கும். சிறப்பாக எழுத முடியும். இதை ஒவ்வொரு மாணவனும் கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.

உடல்வலி, மூட்டுவலி, பல்வலி, தலைவலி, வயிற்றுவலி, கண்வலி, கண் எரிச்சல், ஜலதோஷம், காய்ச்சல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் அரைமணிநேரம் முதல் ஒரு மணி நேரம் பிரமிட் உள்ளே அமர்ந்திருந்தால் நல்ல நிவாரணம் பெறுவர். மேலும் புத்து ணர்ச்சியும் பெறலாம்.

### *பிரமிடின் அதிசியத் தன்மை:*

பிரமிடின் அதிசயத் தன்மை அதனுள் வைக்கும் எந்த உணவுப் பொருளும் அழுகாமல் இருப்பதுதான். மாறாக அதன் சுவை அதிகரித்து விடுகிறது. பிரமிடின் சக்தி கிடைக்க பொருள்களைப் பிரமிடின் நடுப்பகுதியில் வைக்கப் படவேண்டும்.

### *மேல்நாடுகளில் பிரமிடின் பயன்கள்:*

நம்மைவிட அதிகமாக இதைப்பற்றி தெரிந்தவர்கள் அமெரிக்கர்களும், இங்கி லாந்து நாட்டினரும் ஆவர். அமெரிக்க மக்கள் பிரமிடின் தத்துவத்தைப் பெரிதும் நம்புகின்றனர். அங்குப் பல அலுவலக கட்டடங்கள், உணவு விடுதிகள், திரை யரங்குகள் போன்றவைப் பிரமிட் வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. முன் அமைதி பெற இவர்கள் இது போன்ற கட்டடங்களுக்குச் செல்கின்றனர். மேலும் பல நாடுகளில் சிலர் கண்ணாடிப் பிரமிடுகளைத் தயாரித்து எந்த நிறம் தேவையோ அந்த நிற மின்விளக்கைப் பொருத்தி அதன் சக்தியைப் பெறுகின்றனர்.

தொகுப்பு: **எஸ். சரத்குமார்,**
இளங்கலை நுண்ணுயிரியல் முதலாமாண்டு.

<u>குறு ஆய்வு:</u>

## <u>நமது நூலகம்</u>

தற்போது நூலகத்தில் உள்ள மொத்த

| | | |
|---|---|---|
| நூல்கள் | : | 23,420 |
| இதழ்கள் | : | 165 |
| குறுந்தகடுகள் | : | 2,246 |
| ஆய்வேடுகள் | : | 911 ஆகும். |

இந்தக் கல்வியாண்டில் ஜூன் 01 முதல் ஆகஸ்ட் 31 வரை மட்டும் புதிதாக வாங்கப்பட்ட மொத்த

| | | |
|---|---|---|
| நூல்கள் | : | 419 |
| இதழ்கள் | : | 03 |
| குறுந்தகடுகள் | : | 22 ஆகும். |

ஜூன் 01 முதல் ஆகஸ்ட் 31 வரை நூலகத்திற்கு வருகை தந்த மொத்த நபர்களின் எண்ணிக்கை :15,516 ஆகும்.

இவர்களுள் மாணவர்களின் எண் ணிக்கை: 14,112 ஆகும். பேராசிரியர் களின் எண்ணிக்கை: 1,404 ஆகும்.

தகவல் : **திரு. வேலு,**
துணைநூலகர்

மருத்துவம்:

# வேப்பம்பூ

வேப்பம்பூ ஊறல் குடிநீர் தயாரித்து தினமும் பருகி வர உடல்மெலிவு நீங்கும்.

வேப்பம் பூவின் கஷாயத்தைக் காலையிலும் மாலையிலும் சிறிதளவு சிறுவர்கட்குக் குடிக்கச் செய்தால் வயிறு சுத்தப்படும்.



வேப்பம்பூவை வறுத்துப் பொடிசெய்து வேக வைத்தத் துவரம் பருப்பு ரசத்துடன் சேர்த்து உணவுப் பாகமாகக் கொள்ள வாந்தி, ஏப்பம் நீங்கும்.

உலர்த்திய வேப்பம் பூவை நெய்விட்டு வதக்கி, திட்டமான புளி, உப்பு, சீரகம், கறிவேப்பிலைச் சேர்த்துத் துவையலாக்கிச் சாப்பிட பித்த நிவாரணமாகும்.

கொதிக்கும் நீரில் வேப்பம் பூவைப் போட்டு அதன் ஆவியைத் தொண்டைக்குள் படும்படி செய்தால் தொண்டைப் புண் ஆறும்.

வேப்பெண்ணையுடன் சமஅளவு தேன்கலந்து இத்துடன் திரியை நனைத்துக் காதில் செலுத்தி வைக்கக் காது இரணம் நீங்கும்.

திருமதி.**லோ.புனிதவள்ளி,**
தமிழ் விரிவுரையாளர்.

# 'குரு' - பொருள் விளக்கம்

பண்டைய இந்தியாவில் ஆசிரியர் களுக்கு உயர்ந்த இடத்தை அளித்து குரு என்ற புனிதமான சொல்லால் அவர்களை அழைத்தோம்.



உண்மையில் குரு என்ற வார்த்தை மிகப்பெரிய, பரந்த பொருளைக் கொண்டது. குழந்தையின் அறியாமை யாகிய கண்களை அறிவென்ற உலகத்திற்குத் திறந்து வைப்பவர் குரு.

குழந்தையின் முதல் குரு அதன் அன்னை. இரண்டாம் குரு அதன் தந்தை. மூன்றாம் குரு பள்ளியிலுள்ள ஆசிரியர்கள். இவர்கள் குழந்தை யினுடைய மனத்தை உலகியல் மற்றும் சமயம் சார்ந்த உலகத்திற்குத் திறந்து விடுகின்றனர். நாட்டை உருவாக்கும் மனிதனைச் செதுக்கும் சிற்பிகள் இந்தக் குருக்கள்தான்.

இன்று, குரு என்ற வார்த்தையை மதம்சார்ந்து தீட்சை அளிக்கும் சமய ஆச்சாரியர்களையே குறிப்பதாகக் குறுகி விட்டது.

குரு வணக்கம் குறித்து ஆதிசங்கரர், “அறியாமை என்ற கண் படலத்தினால் மூடப்பட்டுள்ள எனது கண்களை ஞானம் என்ற மருந்தினால் திறந்துவிடும் குருவிற்குப் பணிவான வணக்கங்கள்” என்று ஓர் அழகான விளக்கத்தை அளித்துள்ளார்.

**திருமதி. து. சரஸ்வதி,**
தமிழ் விரிவுரையாளர்.

***கவிதை***

# இயற்கை அன்னை சுமந்தாள் என்னை

**“இயற்கைத் தாயே!**
**ஈன்றெடுத்தாய் என்னை நீயே!**
**மழை என்ற பால் சுரந்தாயே !**
**மணம்கமலும் மலராய்ப் பூத்தாயே!**

**அருவிக்கூந்தலை விரித்தாயே!**
**ஆழ்கடல் தன்னிலே குளித்தாயே!**
**மேருவாய் ஆழ்ந்துறக்கம் கொண்டாயே!**
**மேன்மைப் பொருந்தி நின்றாயே!**

**பூமியாய் பொறுமை காத்தாயே!**
**பெண்மைக்கு இலக்கணம் வகுத்தாயே!**
**மருத்துவ குணமெங்கும் கொண்டாயே!**
**மண்ணுக்குள் வைரமாய் வளர்ந்தாயே!**
**தித்திக்கும் கனியாய் திகழ்ந்தாயே!**
**திக்கெட்டும் நீயே நிறைந்தாயே!**

**தாய்தெய்வமென்று நின்னைக் கருதியே!**
**தாள்பணிந்தேன் என்னை வாழ்த்தியே**
**வாழ்விப்பாய் இயற்கை தேவதையே!”**

- ச. கேசவன்,
இளங்கலை இயற்பியல் முதலாண்டு.

***மருத்துவத் தொடர் கட்டுரை - 01***

# ‘இருமல்’ சில தீர்வுகள்

**முனைவர் ப. இராஜேஷ்,**
தமிழ் விரிவுரையாளர்

மனித இனப் பண்பாட்டுக் கூறுகளில் நாட்டுப்புற மருத்துவமும் ஒன்றாகும். நாட்டுப்புற மக்கள் தமக்குற்ற நோய் களைத் தீர்க்கக் கையாளும் மருத்துவ முறைகளை ‘நாட்டுப்புற மருத்துவம்’ எனலாம்.

இதனைக் கைமருத்துவம், பாட்டி மருத்துவம் என்றெல்லாம் அழைத்து வருகின்றனர். கன்னியாகுமரி மாவட்ட யாதவ இன மக்களிடையே காணப்படும் ‘இருமல்’ என்ற நோய்களுக்குரிய மருத்துவ முறைகளும், மருந்துப் பொருள்களையும் தெளிவாகத் தரப் பட்டுள்ளன.

***இருமல்:***

இருமல் என்ற நோய்க்கு ஐந்து வகையான மருத்துவமுறைகளும், பல வகையான மருந்துப் பொருள்களும் பயன்படுத்தப்படுகின்றன. அவை:

1.இஞ்சி, வெள்ளைப் பூண்டு ஆகியவற்றில் ஒவ்வொரு துண்டினையும் இடித்து, அதனுடன் துளசி (ஐந்து இலை) இலைச் சாற்றையும் சேர்த்துத் தாய்ப்பாலில் கலந்து கொடுக்கின்றனர்.

2.மஞ்சள் துண்டு, நல்லமிளகு, இரண்டையும் பொடித்துப் பசும்பாலில் கால் தம்ளர் அளவு கலந்து இவற்றைக் காய்ச்சலில் சிறிது சூடாக இருக்கும் போது அருந்துகின்றனர்.

3.நெல்லிக்காய், திப்பிலி, மாதுளங்காய், ஒரு தம்ளர் நெற்பொரி, பசு நெய் ஆகியவற்றை இடித்துத் தண்ணீரில் (ஒரு தம்ளர்) சேர்த்துக் கொடுக்கின்றனர்.

4.சுக்கு, திப்பிலி, அரிதாரம், வாயுவிளங்கம், வங்காளப் பச்சை, ஏலக்காய், பெருஞ்சீரகம், கார்க்கோல் அரிசி, அக்கரா, ஜாதிக்காய், கொட்டம் ஆகியவற்றைச் சேர்த்து இடித்து இஞ்சிச் சாற்றுடன் கலந்து சாப்பிட வேண்டும்.

5.இரண்டு துண்டு மஞ்சள், சிறிதளவு மிளகு ஆகியவற்றைப் பொடித்துப் பாலுடன் சேர்த்துக் காய்ச்சி சிறிது சூடாக இருக்கும் போது அருந்த வேண்டும்.

*இவை அனைத்தும் உள்மருந்தாகவே கொடுக்கப்பட வேண்டும். இவற்றிற்குப் பத்தியம் ஏதும் வேண்டாம். அட்டவணை பின்வருமாறு :*

| *மருத்துவம்* | *மருந்துப் பொருளின் அளவு* | *செய்முறை* | *கொடுக்கும் அளவு* | *கால அளவு* |
|---|---|---|---|---|
| இஞ்சி வெள்ளைப் பூண்டு, துளசி + தாய்ப்பால் | இஞ்சி, பூண்டு, துளசி ஆகியவற்றில் ஒவ்வொரு துண்டும், துளசி இலை ஐந்தும் | இடித்தல் + சாறு எடுத்தல் | ஒரு சங்கு அளவு | தினமும் மூன்று நேரம் |
| பசும்பால், நல்ல மிளகு, மஞ்சள் | நல்லமிளகு, மஞ்சள் இரண்டிலும் ஒவ்வொரு துண்டு, கால் அளவு பால் (தம்ளர்) | பொடித்தல் + காய்ச்சுதல் | ஒரு சங்கு அளவு | தினமும் மூன்று நேரம் |
| நெல்லிக்காய், திப்பிலி, நெற்பொரி, மாதுளங்காய், தண்ணீர், பசு நெய் | நெல்லிக்காய், திப்பிலி, நெற்பொரி (ஒருதம்ளர்) மாதுளங்காய் ஆகியவற்றில் ஒவ்வொன்று எடுக்க வேண்டும். தண்ணீர் ஒரு தம்ளர். | இடித்தல் | ஒரு தம்ளர் அளவு | தினம் ஒரு நேரம |
| சுக்கு, மிளகு, திப்பிலி அரிதாரம், வாயுவிளங்கம், வங்காளப் பச்சை, ஏலக்காய், பெருஞ்சீரகம், கார்க்கோல், அரிசி, அக்கரா, சாதிக்காய், கொட்டம், இஞ்சி. | ஒவ்வொன்றிலும் சிறிய துண்டினைப் பயன்படுத்துகின்றனர். | இடித்தல் + சாறுஎடுத்தல் | ஒரு கரண்டி அளவு | தினமும் மூன்று நேரம் |
| மஞ்சள், மிளகு | இரண்டு துண்டு மஞ்சள், பத்து மிளகு, ஒரு தம்ளர் பால். | பொடித்தல் + காய்ச்சுதல் | இரண்டு சங்கு அளவு | தினம் இரண்டு நேரம். |

# பெண்களின் சொத்துரிமை

க. நித்யா
இளங்கலைத் தமிழ் முதலாண்டு

*முன்னுரை:*

உலகில் வாழும் மக்கள் அனைவரும் ஆண், பெண் என்ற பாகுபாடின்றி அனைத்து செல்வங்களையும் அடை வதற்கும் அனுபவிப்பதற்கும் உரிமை உண்டு. இந்திய அரசியலமைப்புச் சட்டம் சரத்து 300(a) மற்றும் பன்னாட்டு வாழ்வியல் மற்றும் அரசியல் ஒப்பந்தம் சரத்துகளிலும் பெண்களுக்கு அசையும் அசையா சொத்துக்களில் சமபங்கு உண்டு என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

*இந்து பெண்களின் சொத்துரிமை:*

1956 ஆண்டைய இந்து வாரிசு சட்டம் (The Hindu Succession Act 1956) அமுல்படுத்தப்பட்ட பின்பு இந்துப் பெண்கள் மூதாதையர்கள் சொத்தில் பங்கு பெறுவதற்கு உரிமை வழங்கப்பட்டது.

அதற்கு முன் அமுலில் இருந்த (The Hindu law of Inheritance Act 1929) மற்றும் (Hindu Women's Rights to Property Act 1939) போன்ற சட்டங்களின் படி ஆண்கள் மட்டுமே சொத்துரிமைப் பெற தகுதி உடையவர்களாவர்.

சொத்து கூட்டுக்குடும்ப சொத்தாக இருக்குமானால் இறந்து போனவரின் மனைவி, அவரின் மகனின் மனைவி (மருமகள்) மற்றும் இறந்து போன மகன் வழி பேரனின் மனைவி ஆகியோருக்குச் சொத்தில் 1:3 பங்கு உரிமை பெற உரிமை உண்டு.

தமிழக அரசால் இந்து வாரிசு சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தத் தின்படி (Tamil Nadu Amendment Act 1989) தந்தையின் சொத்தில் முழுமை யான அவகாசம் உண்டு.

ஒரு தந்தைக்கு ஒரு மகனும், மகளும் இருந்தால் தந்தையின் சொத்தில் ஆண்மகனுக்கு எவ்வளவு சொத்தோ அதே அளவு சொத்து பெண் மகளுக்கும் சரிசமபங்கு (Equal share) உண்டு. பெண்ணுக்குத் தன் தந்தை அல்லது தாய்மூலம் கிடைக்கும் சொத்து தன் கணவன் அல்லது மாமனார் வழியாக வரும் சொத்து மற்றும் தானாக சம்பாதித்தச் சொத்து அனைத்தையும் சுதந்திரமாக அனுபவிப்பதற்கு உரிமை உண்டு.

தன் சொத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ, பரிசாக (Gift) கொடுக்கவோ விரும்புகின்றவர்களுக்கு உயில் எழுதி வைக்கவோ இந்துப் பெண்ணுக்கு உரிமை உண்டு.

***முகம்மதிய பெண்களின் சொத்துரிமை:***

இந்து சட்டத்திற்கும் முகமதிய சட்டத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. கூட்டு குடும்பமோ அல்லது உரிமையோ இங்கு ஏற்றுக் கொள்ளப் படவில்லை.

மூதாதையர் சொத்து, தனிச்சொத்து என்ற வேறுபாடு இல்லை. தற்போது இஸ்லாமிய சட்டப்படி ஒரு தந்தைக்கு ஆண் மற்றும் பெண் என இரு பிள்ளைகள் இருந்தால் தந்தையின்

சொத்தில் ஆண் வாரிசான மகன் இரண்டு பங்குகளுக்கும், பெண் வாரிசான மகள் ஒரு பங்கு சொத்தும் அடைவார்கள். இதில் பெண்கள் அந்தச் சொத்தை முழுமையாக அனுபவிக்க முடியும். விற்கவோ அல்லது அடமானம் வைக்கவோ அப்பெண்ணுக்கு அதிகார முண்டு.

*கிறிஸ்துவ பெண்ணின் சொத்துரிமை:.*

கிறிஸ்தவர்களுக்கு இந்திய வாரிசுரிமை சட்டம் 1925இன் படியே சொத்துரிமை வழங்கப்படுகிறது. ஒருவர் தன் மனைவி யையும் (விதவை) மற்றும் நேரடி வழித் தோன்றல்களையும் (மகன், மகள்) விட்டு இறந்தால் விதவைக்கு மூன்றில் ஒரு பங்கும் 1:3 நேரடி (lineal descendants) வழித் தோன்றல்களுக்கு 2:3 பங்கும் கிடைக்கும்.

இறக்கும் போது மனை வியையும் மற்றும் உறவினரையும் விட்டு இறந்தால் இரண்டில் ஒரு பங்கு ½ விதவைக்கும் மீறி உறவினர்க்கும் செல்லும். ஒருவர் தனது மனைவியை மட்டும் விட்டு இறப்பின் எல்லா சொத்தும் மனைவிக்கே செல்லும்.

*முடிவுரை:*

பெண்களுக்குத் தங்களுக்கான உரி மைகள் பற்றித் தெரியாததால் பல பெண்கள் அடிமைகளாக, கணவர்களால் பல சித்திரவதைகளுக்கு உட்படுத்து கிறார்கள்.

சொத்துரிமைகளில் இந்து, கிறிஸ்து, முகமதியர் ஆகிய பெண்களுக்கான சொத்துரிமை அறிய முடிகிறது.

# *கல்லூரிக்கு நன்றி*



இளங்கலைத் தமிழ் பயிலும் நாங்கள் கணினி வகுப்புகள் மூலமாகக் கணினி பற்றியும் இணையம் பற்றியும் இணையத்தின் தமிழ்ப் பயன்பாடு பற்றியும் அறிந்துகொண்டோம்.

மேலும், இணையத்தின் மூலம் நாங்கள் விரும்பியதைத் தமிழில் எவ்வாறு தேடுவது என்பது பற்றியும் தமிழ் அகராதிகள் குறித்தும் அறிந்து கொண்டோம்.


கணினி தட்டச்சு முறை, பவர் பாய்ண்ட் எவ்வாறு செய்வது போன்றவற்றைத் தமிழ் வழியில் அறிந்துகொண்டோம்.

கணினி அறிவினையும் இணைய அறிவினையும் நாங்கள் வளர்த்துக் கொள்ளுவதற்குக் கணினி அறையும் (இணைய வசதியுடன்) அதற்கான காலத்தையும் ஒதுக்கிப் பெரும் உதவி புரிந்த கல்லூரி நிர்வாகத்திற்கும் கல்லூரி முதல்வருக்கும் தமிழ்த்துறைத் தலைவருக்கும் மனம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

***- இளங்கலைத் தமிழ் மாணாக்கர்கள்***

# ஓசோன்

ஓசோன் படலம் ஒன்றும் காணாமல் போய்விடவில்லை என்றும் இந்த நூற் றாண்டின் மத்தியப் பகுதியில் மீண்டும் பழைய நிலைக்கே திரும்பி விடும் எனவும் கணித்துள்ளார். ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஓசோன் படலத்தைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சிலவற்றால் உலகம் முழுவதிலும் உள்ள பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு தோல் புற்று நோய் வருவதும் தவிர்க்கப் பட்டுள்ளது. ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது.



சூரியனிலிருந்து வரும் ஆற்றல் மிக்க புற ஊதாக்கதிர்களை முழுவதுமாக பூமிக்குச் சென்றடையாமல் தடுப்பதுதான் ஓசோன் படலத்தில் முக்கிய வேலை. கடந்த சில ஆண்டுகளாகவே அண்டார்டிகா பணி கண்டத்தில் ஓசோன் அளவு குறைந்து காணப்படுவதும், அது குறித்த விழிப்புணர்ச்சிகளும் இதுபோன்று ஓசோன் குறைந்து காணப்படுவதையே ஓசோன் படலத்தில் ஓட்டை என பொதுவாகப் பலர் கூறுவது வழக்கம். அதிகரித்து வரும் கார்பன் கழிவுகள் காரணமாகப் பூமியின் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் பூமிக்குப் பாதுகாப்பு அளித்து வரும் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்துள்ளது என்று, 1970 ஆம் ஆண்டு கண்டத்தின் கண்டறியப்பட்டது. அண்டார்ட்டிக் கண்டத்தின் மேலே உள்ள பகுதியில் இருக்கும் ஓசோன் படலத்தின் விழுந்த ஓட்டை சிறிது சிறிதாக பெரியதாகி வருவதாக 1980 ஆண்டு விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

ஓசோனில் ஏற்பட்ட ஓட்டை காரணமாக, புறஊதாக் கதிர்களால் மனிதர்களுக்கு தோலில் அழற்சி, கண்ணில் கேட்ராக்ட், தோல் புற்றுநோய் போன்றவை ஏற்படும் என்றும், தாவர வளர்ச்சிப் பாதிக்கப்படும் என்றும் விஞ்ஞானிகள் அச்சம் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து 1987 ஆம் ஆண்டு 196 நாடுகள் மாண்ட்ரில் நகரில் கூடி ஓசோன் படலத்தின் ஓட்டை மேலும் பெரியதாகாமல் தடுப்பது எப்படி என்று ஆலோசனை செய்யப் பட்டது. பின்னர் ஓசோன் படலத்தைக் காக்க 196 நாடுகளும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன.

இந்நிலையில் நான்கு ஆண்டுகள் ஓசோன் குறித்து 300 விஞ்ஞானிகள் ஆய்வு செய்து அறிகை அளித் துள்ளனர். அதன்படி, கார்பன் ஆய்வு கழிவுகள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின் றன. ஓசோனைப் பாதிக்காத பொருட் களைப் பயன்படுத்துவதால், ஒவ்வொரு ஆண்டும் 10 ஜிகா டன் கார்பன் கழிவுகள் உருவாவது கட்டுப் படுத்தப்படுகிறது. இதனால் துருவ பகுதிகளுக்கு வெளியே உள்ள ஓசோன் படலம் 2048 ஆம் ஆண்டில் 1980 இல் இருந்து பழைய நிலைக்குத் திரும்பி விடும் என்பது தற்போதைய ஐக்கிய நாடுகள் விஞ்ஞானிகளின் கணிப்பு.

தென்துருவத்தில் ஏற்பட்டுள்ள ஓசோன் படலம் ஒவ்வொரு குளிர்காலத்தில் போதும் அடைவு ஏற்பட்டுள்ள முயற்சிப்பதும் பருவ நிலை மாறுபடும் போது ஓட்டை ஏற்படுத்தும் என்று ஓட்டை அடைபடுவதில் தடை ஏற்படுகிறது. அண்டார்டிகா போன்ற துருவ பகுதியில் ஓசோன் படலம் 2073 இல் காக்கப்படுகிறது. செப்டம்பர் 16ஆம் தேதி நடைபெற்றச் சர்வதேச ஓசோன் படலத் தினத்தையொட்டி இந்த ஆராய்ச்சி சமர்ப்பிக்கப்பட்டது.

# நட்பு

***“தாய் கருவில் சுமக்கிறாள்***
***தந்தை தோளில் சுமக்கிறார்***
***சிலர் நம்மை இதயத்தில்***
***கூடச் சுமக்கிறார்கள்***
***நான் உன்னை எங்கும்***
***சுமக்கவில்லை – காரணம்***
***நட்பு சுமை அல்ல; சுகம்.”***

**- ர. சுகன்யா,**
இளங்கலை கணினி பயன்பாட்டியல்
முதலாண்டு, கே.எஸ்.ஆர். கலை அறிவியல்
மகளிர் கல்லூரி

# நட்பின் தத்துவம்

***“வானம் முழவதும் நட்சத்திரம் - அதில்***
***நிலவு என்பது அற்புதம்.***
***மரங்கள் முழுவதும் இலைகள் - அதில்***
***பூக்கள் என்பது அற்புதம்.***
***இதயம் முழுவதும் நண்பர்கள்- அதில்***
***நீ எப்பவும் அற்புதம்.”***

**- உ. அரவிந்த்,**
இளங்கலை கணினி பயன்பாட்டியல்
முதலாண்டு, ‘அ’ பிரிவு.

# கிழமைகளின் பெயர்க்காரணம்

**எஸ். அபிராமி**
இளங்கலை கணிதம் (கணினி பயன்பாடு)
இரண்டாமாண்டு

**ஞாயிறு**

கதிரவனுக்கு முதன்மை அளித்ததன் வழியாக Sunday என்று அழைக்கப் பட்டது.

**திங்கள்**

சந்திரனின் நாளாக இரண்டாம் நாள் கருதப்பட்டதால் Monday என்று பெயரிடப்பட்டது.

**செவ்வாய்**

ஸ்காண்டி நேவியர்கள் என்னும் மேலைநாட்டு மக்கள் ‘திவ்’ (Tiw) என்று கடவுளை வணங்கினர். இக்கடவுளின் நினைவாக Tuesday உருவாகியது.

**புதன்**

ஸ்காண்டி நேவியர்களின் அரசன் ‘வுடின்’ (Wodin) நினைவாக Wednesday என்று பெயரிடப்பட்டது.

**வியாழன்**

இடி கடவுளின் பெயரே Thursday என்றாயிற்று.

**வெள்ளி**

ஸ்காண்டி நேவியர்களின் அரசி ‘பிரிக்’ (Frigg) நினைவாக Friday என்று பெயரிடப்பட்டது.


**சனி**

ரோமானியர்களின் கடவுளின் பெயர் சாட்டர்ன். அக்கடவுளின் நினைவாக Saturday உருவாகியது.

# ‘சமாதானப் புறா’ ஜவகர்லால் நேரு

மா. பிரேம்குமார்,
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

ஜவகர்லால் நேரு அவர்கள் ‘மாந்தருள் மாணிக்கம்’ எனவும் ‘ஆசியாவின் ஜோதி’ எனவும் ‘சமாதானப் புறா’ எனவும் மக்களால் அழைக்கப்பட்டவர்.



*நேரு எப்போதும் ‘குல்லா’ அணிந்திருப்பார். அவர் குல்லா அணியாதபோது எடுக்கப்பட்டதே இப் புகைப்படத்தின் சிறப்பு.*

மோதிலால் நேருவின் மகனான இவர் விடுதலை இந்தியாவின் முதல் பிரதமர் ஆவார். நேர்மை, நாணயம், நம்பிக்கை, கட்டுப்பாடு, மனிதப் பண்பு ஆகியவற்றின் மொத்த உருவமாகத் திகழ்ந்தார். அவரைப் புதிய இந்தியாவை உருவாக்கிய சிற்பி எனவும் கூறலாம்.

அவர் வகுத்த அயல்நாட்டுக் கொள்கை சிந்தனைக்குரியது. ‘தன் மானத்தோடு சமாதானம்’ என்பதே அது. கூட்டுச் சேராக் கொள்கையை நேரு கடைப்பிடித்தார். அதாவது, வல்லரசுகளாக விளங்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டுடனோ, சோவியத்து உருசிய நாட்டுடனோ சேராதிருத்தல். பஞ்சசீலக் கொள்கை என்பதும் அயல் நாட்டுக் கொள்கையின் ஓர் அங்கமாகும்.

**பஞ்சசீலக்கொள்கை:**

எல்லா நாடுகளும் சமாதானத்துடன் சகவாழ்வு வாழ வேண்டும். வலிய நாடுகள் எளிய நாடுகளைத் துன்புறுத்தாமை. எந்த நாடும் பிற நாட்டு உள் விவகாரங்களில் தலையிடாமை. வளரும் நாடுகட்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல். அனைத்து நாடுகளின் பாதுகாப்பிற்கும் மரியாதை அளித்தல். இக்கொள்கைகள் 1955ஆம் ஆண்டு பாண்டுங்கு மாநாட்டில் நேரு வெளியிட்டார்.

பஞ்சசீலக்கொள்கையின் வழியாக நாடுகளுக்கிடையிலானப் போரைத் தவிர்க்கலாம். அமைதி, மரியாதை, தன்னம்பிக்கை, முன்னேற்றம், வளம் ஆகியவற்றுடன் அனைத்து நாடுகளும் வாழ வழியேற்படும்.

ஆனால், பெரும்பான்மையான நாடுகள் இக்கொள்கையைக் கடைப் பிடிக்க வில்லை. சிறுபான்மையான நாடுகள் இக்கொள்கையினை நாடுகள் மீறவும் செய்கின்றன. அதன் விளைவாகவே, 1962இல் சீனாவுடனும் 1965இல் பாகிஸ் தானுடனும் இந்தியா போரினை எதிர் கொண்டது.

நாமும் நம் உலக நாடுகளும் நேரு வகுத்தப் பஞ்சசீலக் கொள்கையினைக் கடைப்பிடித்தால் உலகம் போரின்றி வாழ வழிப்பிறக்கும்.

**(நவம்பர் 14 நேரு பிறந்த தினம்)**

# மக்கள் தலைவர்
# கே.எஸ்.ஆர்.

(கடந்த இதழின் தொடர்ச்சி)

## ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்

திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக (1984) மக்கள் தலைவராக கே.எஸ்.ஆர் அவர்கள் பணியாற்றியுள்ளார். அந்த ஐந்தாண்டு காலத்தில், ஐம்பதாண்டுகளில் இருந்து ஆற்றவேண்டிய பணிகளை ஆற்றியுள்ளார். மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் குடிநீர் பிரச்சினையைத் தீர்த்தார். அரசு உதவியோடும், தனது சொந்தப் பணத்தோடும், திருச்செங்கோடு ஒன்றியம் முழுவதும் ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்த அருமைத் தொண்டர் கே.எஸ்.ஆர் ஆவார்.

இருண்டு கிடந்த கிராமங்களெல்லாம் மின்னொளி பெற பெரிதும் பாடுபட்டார். போக்குவரத்து வசதி அற்ற அனைத்து கிராமங்களும் தார்ச்சாலை வசதி பெற பெரிதும் காரணமாகத் திகழ்ந்தார். இதன் காரணமாக, மக்கள் பேருந்து வழித்தட வசதிகள் பெற பெரிதும் பாடுபட்டார். கிராமச் சுகாதார நிலையங்கள் அமைய பெரும் முயற்சியை மேற்கொண்டார்.

இவரது பெரும் முயற்சியின் காரணமாக மக்கள் சுகாதார வசதி, மின்வசதி, பேருந்து வசதி, குடிநீர்வசதி ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற்றனர். எனவே, இவரைப் பொது நலப்பூங்கா, மனிதநேயர் என்றெல்லாம் பட்டங்கள் தந்து இன்றும் பாராட்டி வருகின்றனர்.

திருச்செங்கோடு ஒன்றியம் சிறந்த ஒன்றியமாக, வியாபார ஸ்தலமாக, ரிக் நகரமாக மாற கே.எஸ்.ஆர் ஆவர்களே பெரிதும் காரணம் ஆவார் என்றால் அது மிகையாகாது.

## தொழில் துறையின் நம்பிக்கை நட்சத்திரம்:

இன்று இந்தியாவின் வெளிநாட்டு வருவாயை ஈட்டித்தரும் தொழில்களில் ஒன்று ஆயத்த ஆடை தயாரிப்பது ஆகும். கே.எஸ்.ஆர் அவர்கள் தனது தொழிற்கூடங்களின் வாயிலாக ஆயத்த ஆடைகளை உருவாக்கிப் பல நாடுகளுக்கு அனுப்பி வருகிறார். இவரைப் பார்த்தப் பலரும் இவரது வழிமுறையைப் பின்பற்றி ஆயத்த ஆடைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றார்கள்.

இன்று திருச்செங்கோடு மாநகரம் ஒரு பெரிய ஏற்றுமதித்தலமாக திகழ்வதற்கு வித்திட்டவர் கே.எஸ்.ஆர் அவர்கள். வெளிநாட்டவர்களுடைய தேவைக்கேற்ப புதிய தொழில்நுட்பம் நிறைந்த ஆடைகளை உற்பத்தி செய்து வருவதே இவரது தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாகும்.

## ‘ரிக்’ வேந்தர்

“நீரின்றி அமையாது உலகம்” என்பது சான்றோர் வாக்கு. மனித வாழ்விற்குப் பெரிதும் தேவையாகத் திகழ்வது குடிநீர் ஆகும். வறட்சியால்

பாதிக்கப்பட்டப் பகுதிவாழ் மக்களெல்லாம் குடிநீர்க்காகத் தொலைதூரம் சென்று தொல்லைப்படுவதையும் வாழ்வின் பெரும் பகுதியை, குடிநீர் எடுத்து வருவதில் செலவிடுவதையும் கண்டு கலங்கினார் கே.எஸ்.ஆர். அதற்காகப் பல ரிக் இயந்திரங்களை வாங்கினார்.

அவரது ரிக் இயந்திரங்கள் வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்தக் கோடிக் கணக்கான மக்களுக்குக் குடிநீர் வசதியைச் செய்து தந்தன. தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவின் கோடிக் கணக்கான மக்கள் பயன்பெறும் வகையில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து, இந்தியரின் தாகம் தீர்த்தத் தர்மதேவர் கே.எஸ்.ஆர் என்றால் அது மிகையாகாது.

இவரைப் பின்பற்றி திருச்செங்கோடு பகுதியைச் சார்ந்த பலரும் ரிக் தொழிலில் ஈடுபட்டனர். இன்று திருச்செங்கோடு ஒரு ரிக் தொழிலின் தலைநகரமாக திகழ்கிறது. இதற்கு முன்னோடியாக திகழ்ந்தவர் கே.எஸ்.ஆர். அவர்கள் என்றால் மிகையாகாது.

## வேலைவாய்ப்பகம்

ஒரு சாதாரண குடும்பத்தில் தோன்றி இன்று சரித்திரம் படைத்து வரும் நாயகர் கே.எஸ்.ஆர். ஆவார். மாளாத உழைப் பாலே மலைமுகடாய் உயர்ந்து நிற்கும் கே.எஸ்.ஆர். அவர்கள் தனது பட்டறிவைப் பலருக்கும் கூறி பலரும் சுயதொழில் செய்ய பெரிதும் காரணமாக திகழ்கிறார். சுயதொழில் செய்ய இயலாதவர்களுக்குத் தனது தொழிற் சாலைகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பயிற்சி தந்து, சிறந்த பணியாளர்களை உருவாக்கி வருகிறார்.

பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் களுக்கு வாழ்வளிக்கும் வள்ளலாக விளங்குகிறார். ஆயிரக்கணக்கான ஆசிரி யர்களுக்கும், பணியாளர்களுக்கும் தனது 14 கல்வி நிறுவனங்களின் மூலம் வேலைவாய்ப்பு அளித்து அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்றுகிறார். அரசு வேலைவாய்ப்பு நிறுவனங்களைவிட அதிகமான வேலை வாய்ப்பு வழங்கும் வேலைவாய்ப்பகமாக கே.எஸ்.ஆர். அவர்கள் திகழ்கிறார்.

## ஆன்மீகப் பணியில் கே.எஸ்.ஆர்.

உடலுக்கு உணவு தேவை. உள்ளம் பதப்பட ஆன்மீகம் தேவை என்பார் காந்தியடிகள். இதை மனதிற்கொண்ட கே.எஸ்ஆர். அவர்கள் ஆன்மீகப் பணிக்காகத் தனது வருவாயின் ஒரு பகுதியைச் செலவிடுகிறார். விண்முட்டும் கோபுரங்களை வினைதீர்க்கும் ஆலயங் களை உருவாக்கி வருகிறார்.

கோவில்களின் குடமுழுக்கு விழா விற்குகாகப் பல்லாயிரக் கணக்கான தொகையை வழங்கியுள்ளார். இதற்கு தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு கோயில் கல்வெட்டுக்களே சான்றாகும். பல்வேறு கோயில் விழாக்கள் நடைபெறவும் பல்வேறு கலை கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறவும் பெரும் தொகையை வாரிவழங்கும் ஆன்மீக வள்ளலாக கே.எஸ்.ஆர். அவர்கள் திகழ்கிறார்.

திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் தங்கத்தேர் உருவாகப் பெருந் தொகையை வழங்கியதோடு, அம் மலைக்கு, மலைப் பாதை வசதி அமைய பெரிதும் காரணமாகத் திகழ்ந் துள்ளார்.

## அரிமா சங்கத்தலைவர்

திருச்செங்கோடு அரிமா சங்கத்தை உருவாக்கி அதன் தலைவராகவும் பட்டயத் தலைவராகவும் திகழ்கிறார் கே.எஸ்.ஆர். அவர்கள். கோவை மண்டல அரிமா சங்கத்தின் அமைச்சர் அவையின் துணைத்தலைவராகவும் பணியாற்றி வருகிறார். அரிமா சங்கத்தின் இயக் கத்தில் கே.எஸ்.ஆர். அவர்களின் பங்குப் பாராட்டுக்குரிய பெரும்பங்கு ஆகும்.

இவ்வரிமா சங்கம் கண்தானம், இரத்ததானம், உடல் பரிசோதனை முகாம்கள், ஏழை எளியவர்களுக்குக் கல்வி உதவித்தொகை, முதியோர் மற்றும் எளிய பிரிவினருக்கு நலத்திட்ட உதவிகள், கிராமங்களைத் தத்தெடுத்து மருத்துவ மனைகளுக்குக் கட்டிடங்கள், மருத்துவ உபகரணங்கள் வழங்குதல் போன்ற எண்ணற்ற அரும் பெரும் சேவைகளைச் செய்ய கே.எஸ்.ஆர். அவர்கள் மூலக் காரணமாய்த் திகழ்கிறார் என்றால் அது மிகையாகாது.

## முடிவுரை:

இங்ஙனம் கே.எஸ்.ஆர். அவர்கள் பன்முகத்திறன் கொண்ட படைப்பாளராகத் திகழ்கிறார். பாரீஸ் கோபுரம் பார்ப் பவருக்குப் பார்க்கிற கோணத்தில் காட்சி தரும் என்பார்கள்.

அதுபோல, கே.எஸ்.ஆர். அவர்கள் கல்வி உலகிற்குக் "கலங்கரை விளக்கமாக", "கல்வித் தந்தையாக", "கல்வி ரத்னாவாகத்" திகழ்கிறார். தொழில்துறையைச் சார்ந்தவர் பார்வையில் மிகச்சிறந்த தொழில் அதிபராக, தொழில்துறையின் முன்னோடியாக காட்சி அளிக்கிறார். பொது மக்களுக் குக் கலியுக வள்ளலாக, பொதுநலப் பூங்காவாகக் காட்சி தருகிறார். மத்திய, மாநில அரசுக்கு அவர் வெளிநாட்டு வருவாயை ஈட்டித்தரும் வாயிலாக திகழ்கிறார். தொழிலாளர் களுக்குத் துணைநிற்கும் தோழராக விளங்குகிறார். நெசவாளர்கள், விவ சாயிகள், ரிக் தொழிலைச் சார்ந்தவர் களுக்கு அவர் ஒரு முன்மாதிரியாக விளங்குகிறார்.

பலரது வாழ்வில் ஒளியூட்டும் போது அவர் ஒரு சூரியனாகப் பிரகாசிக்கிறார். பலருக்கும் கருணை காட்டும் போது அவர் ஒரு சந்திரனாகத் திகழ்கிறார். தொழிலாளர்களைக் காப்பதில் அவர் ஒரு கேடயமாகத் திகழ்கிறார். புகழ் பெறுவதில் அவர் ஒரு இமயமாக விளங்குகிறார். இவரது இத்தகைய இமாலய சாதனைகளுக்குக் காரண மாகத் திகழ்வது உழைப்பையும், ஊக்கத்தையும் நேரத்தையும், நினைப் பையும் மக்களுக்காகப் பயன்படுத் தியதே ஆகும். பட்டங்களால் பெருமை பெறுபவர் பலர். ஆனால், மக்கள் வழங்கும் பட்டங்களுக்குப் பெருமை சேர்ப்பவர் மிகச் சிலரே. கே.எஸ்.ஆர். அவர்கள் பட்டங்களுக்கே சிறப்புச் சேர்க்கும் செம்மையாளர் என்றால் அது மிகையாகாது. *(முற்றும்)*

கவிஞர் **திரு. மோ. ஆ. யுவராசா**
தமிழ்ப் பேராசிரியர்
கே.எஸ்.ஆர். கல்வியியல் கல்லூரி

தொடர் செய்யுள் : பகுதி - 05

## ❄ கே.எஸ்.ஆர். பிள்ளைத் தமிழ் ❄



## 5. முத்தப் பருவம்

*பிள்ளைத்தமிழின் ஐந்தாம் பருவம் முத்தப்பருவம் ஆகும். முத்தம் தருமாறு (கே.எஸ்.ஆர். ஆகிய)குழந்தையைத் தாய், தந்தை முதலியோர் வேண்டும் பருவம் இது. குழந்தையின் 11 ஆம் திங்களில் இந்நிகழ்வு நிகழும்.*

*"ஆனைமுகன் முத்தமும்*
*ஆறுமுகன் முத்தமும்*
*அழகழகாய் நாளும் பெற்று*
*அளவான வாழ்க்கையை*
*வளமான வாழ்க்கையை*
*அனுதினமும் நடத்துகின்ற*
*ஞானமுக ஈசனும் தேவியும் ஒன்றாகி*
*ஞாலத்தைக் காக்கும் குன்றாகும்*
*ஞாயிறும் திங்களும் தொழுதிடும் செங்கோட்டில்*
*ஞானமெனும் கல்வி தன்னைத்*
*தானமுக மாய்ச்செய்யும்*
*கலியுகக் கர்ணனே!*

*தாழாத கீர்த்திக் கொண்டாய்!*
*தாளாளர் தங்கமே! வேளாளர் சிங்கமே!*
*தக்கவர் போற்றும் செல்வா!*
*வானமுகத் தேயிருந்து*
*வந்திட்ட கங்கைபோல்*
*வையத்தில் வளரும் சேயே!*
*வாழ்விக்கும் கல்வியை*
*வளர்விக்கும் ரங்கனே!*
*வாய்முத்தம் தருக நீயே!*

*கொற்கையெனும் துறையிலே*
*கடல்நடுவில் வாழ்ந்திடும்*
*கொல்லிமலை செங்கோடு*
*குன்றுகளில் வளர்ந்திடும்*
*மூங்கிலின் முத்தினுக்கும்*
*நிற்கையில் மலைபோல*
*தோன்றிடும் யானையின்*
*நீள்கோட்டு முத்தினுக்கும்*
*நிகரிலா நீர்வயலின்*
*நெற்கதிரின் முடிநல்கும்*
*நிறைவான முத்தினுக்கும்*
*அற்புதமாம் இவ்வுலகில்*
*அவைகட்கு விலையுண்டு:*
*அரங்கனே! நீநல்கிடும்*
*அமுதனைய முத்தினுக்(கு)*
*ஈடாக ஏழுலகை*
*அமைத்தாலும் ஈடாகுமா?*

*பொற்புடைய முத்தமிழைச்*
*சுவைத்தநின் இதழ்குவிய*
*புதுமுத்தம் நீதருகவே!*

*பொன்மனச் செல்வநின்*
*பொய்யிலா இதழ்குவிய*
*புகழ்முத்தம் நீதருகயே!"*


கவிஞர் ***திரு. மோ. ஆ. யுவராசா,***
தமிழ்ப்பேராசிரியர்,
கே.எஸ்.ஆர். கல்வியியல் கல்லூரி.


## *இந்த இதழின் ஓவியங்கள்*

**முன்பக்க அட்டை:**

**க. ஆனந்த்**

இளங்கலை கணினி அறிவியல் முதலாண்டு
ஆ பிரிவு

**பின்பக்க அட்டை:**

**எம். சௌந்தர்யா**

இளங்கலை ஆடைவடிவமைப்பு மற்றும்
துகிலியல் துறை முதலாண்டு